**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 163/2020.**
**வழக்கு சாட்சி – அ.சா. 6 (பட்டியல் சாட்சி –6).**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. பிச்சை. | ஜாதி | |
| தந்தை பெயர் | சீனி செட்டியார். | தொழில் | செக்கியூரிட்டி. |
| கிராமம் | தேனி. | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 72/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.04.2026.

**(எதிரி ஆஜரில்லை. அவருக்காக பிரிவு 355 B.N.S.S. –ன் கீழ் மனுத் தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**<u>அரசுத் தரப்பு முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது, தேனியில் குடியிருந்துகொண்டு, செக்கியூரிட்டியாக வேலை செய்துவருகிறேன். தற்போது, இந்நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் முதலாவதக உள்ள கையெழுத்து என்னுடையதுதான். தேதி மற்றும் மாதம் தற்போது, ஞாபகமில்லை, சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்பாக, சுக்குவாடன்பட்டி அருகில் உள்ள மரியள ஜோசப் மிலுக்கு எதிரே விபத்து நடந்த இடத்தை போலீசார் வந்து வரைபடம் தயார் செய்து, எழுதிக்கொண்டார்கள். அதில் நான் மட்டும் கையெழுத்துப் போட்டேன். **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது**.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

சம்பவயிடத்திற்கு யார் என்னை வரச் சொன்னது என்றால், யாரும் வரச் சொல்லவில்லை. சம்பவயிடத்திற்கு அருகாமையில் உள்ள இரும்புக் கடைக்கு எதிரே டாஸ்மாக் கடை உள்ளது என்றால், சரிதான். மேற்படி இடத்தில் Zebra Crossing கோடு இல்லை என்று சொன்னால், சரிதான். சம்பவயிடத்தில் இரத்தக் கறை மற்றும் கார் சேதமான பொருட்கள் எதுவும் இல்லை என்று சொன்னால், சரிதான். சம்பவயிடத்தில் போலீசார் படம் வரைவதற்கு வசதி இல்லை என்றாலும்,

ஏற்கனவே படம் வரைந்து கொண்டு வந்த பேப்பரில் நான் கையெழுத்துப் போட்டேன் என்றால், சரியல்ல. சம்பவயிடம் பெரியகுளம் மெயின் ரோடு என்றாலும், அந்த இடத்தில் போக்குவரத்து எந்தநேரமும் இருக்கும் என்று சொன்னாலும், சரிதான். சம்பவநேரம் கொரோனா பெருந்தொற்று பாதிப்பு இருந்த காலகட்டம் என்றால், சரிதான். சம்பவயிடம் அருகே பலசரக்கு கடை எதுவும் இல்லை என்று சொன்னால், சரிதான். போலீசார் என்னிடம் கையெழுத்து இரவு நேரம் வாங்கினார் என்றால், சரியல், மறுநாள் காலையில் பகல் நேரத்தில் கையெழுத்து வாங்கினார்கள்.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.04.15 18:17:20 +0530

**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**
**தேனி.**